காலாண்டுத் தேர்வு - 2019

மாதிரி வினாத்தாள்

வகுப்பு : 10 பாடம் : தமிழ் முதல் தாள்

கால அளவு : 15 நிமிடம் + 2.30 மணி நேரம் மதிப்பெண்கள் : 100

( செய்யுள்,உரைநடை )

பகுதி - 1

மதிப்பெண்கள் : 14

I. பலவுள் தெரிக. 14×1=14

1. " முத்தமிழ் துய்ப்பதால்" பாடல் அடிகள் இடம் பெற்ற நூல் ...

அ) இரட்டுற மொழிதல் ஆ) ஐம்பெரும்காப்பியம் இ) பரிபாடல் ஈ) தேன்மழை

2. வேர்க்கடலை,மிளகாய் விதை,மாங்கொட்டை ஆகியவற்றை குறிக்கும் பயிர் வகை---

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

3. ' உனக்கு பாட்டுகள் பாடுகிறோம்'

' உனக்கு புகழ்ச்சி கூறுகிறோம்' - இவ்வடியில் உள்ள நயங்கள் முறையே

அ) உருவகம், எதுகை ஆ) மோனை , எதுகை இ) முரண்,இயைபு ஈ) உவமை, எதுகை

4. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி '--- கோடிட்ட சொல்லின் பொருள்

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5. இமைகளை மூடிய படி எழுதும் ஆற்றல் கொண்டவர்--------------

அ) பாவாணர் ஆ) திரு.வி.க இ) பாரதியார் ஈ) முகிலன்

6. ' உனதருளே பார்ப்பன் அடியேனே ' - யார் யாரிடம் கூறியது?

அ) குலசேகராழ்வார் இறைவன் ஆ) இறைவன் குலசேகராழ்வார் இ) மருத்துவர் நோயாளி ஈ) நோயாளி மருத்துவர்

7. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) பீம் ஆ) போன் பே இ) குலா ஈ) இலா

8. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர்--------------

இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்-----------------

அ) அமைச்சர்,மன்னன் ஆ) அமைச்சர்,இறைவன் இ) இறைவன்,மன்னன் ஈ) மன்னன்,இறைவன்

9. 'சதாவதானி' என்று பாராட்டு பெற்றவர்-----------

அ) செய்குதம்பி பாவலர் ஆ) கம்பர் இ) பரஞ்சோதி முனிவர் ஈ) குலசேகராழ்வார்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி

( 10,11,12,13,14)

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ

புதுமைத் தமிழாசிரியர்கள் குழு

**ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே**

**10. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?**

அ) பெருமாள் திருமொழி ஆ) பரிபாடல் இ) காசி காண்டம் ஈ) மலைபடுகடாம்

**11. இப்பாடலின் ஆசிரியர் யார்?**

அ) கீரந்தையார் ஆ) குலசேகராழ்வார் இ) பரஞ்சோதி முனிவர் ஈ) தமிழழகனார்

**12. இப்பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்கள்**

அ) வாளால்,மாளாத ஆ) வாளால்,அறுத்து இ) மீளாத,காதல் ஈ) ஆளா,அடியேனே

**13. மாளாத - என்பதன் பொருள் யாது?**

அ) தீராத ஆ) முடியாத இ) கூறாத ஈ) இயலாத

**14. பிரித்து எழுதுக- 'உனதருள்'**

அ) உன + அருள் ஆ) உனது + அருள் இ) உ+ அருள் ஈ) உனக்கு + அருள்

**பகுதி - II**

**மதிப்பெண்கள் : 20**

**பிரிவு - 1** **5×2=10**

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.**

**15. காற்றின் வேறு பெயர்கள் யாவை?**

**16. விருந்தோம்பல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை?**

**17. இயந்திர மனிதன் ' பெப்பர் ' - குறித்து எழுதுக.**

**18. தமிழ் நாட்டில் சில நெல் வகைகளை எழுதுக.**

**19. தாய்மொழியும் ,ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழி யாது? காரணம் கூறுக**

**20. விடைக்கேற்ற வினா அமைக்க;-**

அ) மொழி ஞாயிறு என்றழைக்கப்படுபவர் பாவாணர்.

ஆ) உரைநடையும் ,கவிதையும் இணைந்து யாப்பு கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப் -படும் கவிதை வசனக் கவிதை எனப்படும்.

**21. மக்களை மகிழ்வடையச் செய்யும் நிகழ்த்துக் கலைகளை ஏதேனும் இரண்டு கூறுக.**

**பிரிவு - 2** **5×2=10**

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.**

**( 28 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க )**

**22. ' மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே' -இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

**23. வசன கவிதை என்றால் என்ன?**

**24. இறடி பொம்மல் பெறுகுவீர் -தொடர் உணர்த்தும் பொருள் எழுதுக.**

**25. குலசேகராழ்வார் வித்துவ கோட்டு இறைவனிடம் வேண்டுவது யாது?**

**26. உயிர்கள் வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி குறிப்பிடுக.**

பள்ளிக் கல்வி ஆசிரியர்கள் குழு

27. சதாவதானம் என்றால் என்ன?.

28. “ எப்பொருள் “ எனத் தொடங்கும் குறளை எழுதுக.

## பகுதி - III

## மதிப்பெண்கள் : 50

### பிரிவு - 1 2×5=10

எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:-

29. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன யாவை?

30. முந்நீர் நாவாய் ஓட்டியாக காற்று எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

31. விருந்தை எதிர்கொள்ளும் தன்மை குறித்துக் குறுந்தொகையும், கொன்றை வேந்தனும் கூறும் கருத்துகள் யாவை?

32. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா? என்பது குறித்த சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.

33. மொழிபெயர்ப்புக் கல்வியை கற்பதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?

### பிரிவு - 2 4×5=20

எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:

34. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

35. மாளாத காதல் நோயாளன் போல் - உவமை காட்டும் செய்தியை விளக்குக.

36. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.

37. காசிக்காண்டம் உணர்த்தும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கங்களை கூறுக.

38. அருந்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம் பொருத்துவதும் கல்வியென்றே போற்று - இடம் சுட்டி பொருள் விளக்குக.

### பிரிவு - 3 4×5=20

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:-

39. பொருத்துக.

| | |
|---|---|
| 1. பாவலரேறு | அ. செய்குதம்பி பாவலர் |
| 2. சிந்துக்குத் தந்தை | ஆ. கமபர் |
| 3. கல்வியில் பெரியர் | இ. தமிழழகனார் |
| 4. சந்தக் கவிமணி | ஈ. பாரதியார் |
| 5. சதாவதாணி | உ. பெருஞ்சித்திரனார் |

40. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

பூ உண்டு. ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்பற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள்: ஆல மலர், பலா மலர்.

மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இது தான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள்: சுள்ளி மலர், பாங்கர் மலர்.

பதிவேற்ற தமிழாசிரியர்கள் குழு

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் : அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.


பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன : நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீய்ப்பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும், பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

- கோவை.இளஞ்சேரன்.

1. மலர் உண்டு; பெயரும் உண்டு. - இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.
2. அரும்பாகி மொட்டாகி பூவாகி - என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக
3. நீங்கள் அறிந்த இரு பூக்களின் பெயர்களையும் பயன்களையும் எழுதுக.
4. அரிய மலர் - இலக்கண குறிப்பு தருக.
5. தொடரில் பொருந்தாப் பொருள் தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக.
   இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிறிப் பூ குடிநீருக்குத் தன் மனத்தை ஏற்றும்.

41. படம் உணர்த்தும் கருத்தை நயமாக ஐந்து தொடர்களில் குறிப்பிடுக.



42. நனந்தலை உலகம் - எனத் தொடங்கும் முல்லைப் பாட்டினை அடி மாறாமல் எழுதுக.

பகுதி - IV

மதிப்பெண்கள் : 16

விரிவாக விடையளிக்க:- 2×8=16

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

( அல்லது )

ஆ) உங்கள் இல்லத்திற்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக

( அல்லது )

ஆ) இறைவன்,புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன்

**எழுதுக.**

**தங்களின் மேலான கருத்துகளுக்கு:-**

| | |
|---|---|
| **வினாத்தாள் தயாரிப்பு:**<br>**புதுமைத் தமிழாசிரியர்கள் குழு**<br>**இரா. பிரேமா., M.A.,B.Ed.,M.A**<br>தமிழாசிரியர்,<br>அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி.,<br>இளம்பிள்ளை.,<br>சேலம் - 637502 | **வடிவமைப்பு,தட்டச்சு.,மற்றும் கூடுதல் வினாக்கள்:**<br>**புதுமைத் தமிழாசிரியர்கள் குழு**<br>**வெ.ராமகிருஷ்ணன்.M.A.,B.Ed.,D.T.Ed,**<br>**( தமிழ்விதை )**<br>தமிழாசிரியர்<br>அரசு உயர் நிலைப்பள்ளி,<br>கச்சுப்பள்ளி, |

புதுமைத் தமிழாசிரியர்கள் குழு